## 30.6 ஊரக மருந்தகங்களில் பணி புரியும் மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுடன் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறைக்கு மாற்றம் செய்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ–5) துறை

அரசாணை (நிலை) எண்.39 நாள் : 04.05.2006

படிக்க :

1. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண். 1002/05/இ2, நாள் 22.2.05.
2. சிறப்பு ஆணையர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம் கடிதம் எண். 1621/எஸ்.எஸ்.2/04, நாள் 17.3.2005, 13.7.2005, 21.10.2005 மற்ம் 17.2.2006.

**ஆணை**

மாநில திட்டக்குழுவானது ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் ஊரக மருந்தகங்களின் செயல்பாடுகளுக்கு 50 சதவீதம் மானியமாக (வருடத்திறகு ரூ.5400/– க்கு மிகாமல்) மாநில அரசு தறபோது வழங்கி வருகிறது. அதேபோன்று பொது சுகாதாரத்துறையின் கீழ் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார மையங்களுக்கும் மாநில அரசு மானியம் வழங்கப்படுவதால் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் செயல்படும் ஊரக மருந்தகங்கள் இயங்கத் தேவையில்லை எனவும், இம்மருந்தகங்களை பொது சுகாதாரத் துறையின் கீழ் இயங்க அவைகளை பொது சுகாதாரத்துறைக்கு மாற்றலாம் என கருத்து தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் படிக்கப்பட்ட 1 மற்றும் 2 ல் ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி சிறப்பு ஆணையர் ஆகியோர் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பி வைத்துள்ளனர்.

2. மேற்காணும் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் இணைப்பில் கண்டுள்ள 64 ஊராட்சி மருந்தகங்களை அதில் பணியாற்றி வரும் பட்டதாரி மருத்துவர்கள் மற்றும் இதர பணியாளர்களுடன் இந்திய மருத்துவத் துறைக்கு ஒப்புவிப்பு செய்து ஆணையிடப்படுகிறது:–

(அ) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்படும் பட்டதாரி மருத்துவர்கள் மற்றும் இதரப் பணியாளர்களை, அத்துறையில், நியமனம் செய்யப்படவருக்கும் பணியிடங்கள் ஏதேனும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரம்பிற்கு உட்பட்டவைகளாக இருப்பின், இந்நேர்வில் உள்ள பணியாளர்களை அப்பணியிடங்களில் நியமனம் செய்வதற்கு முன்பு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை பெறவேண்டும்.

(ஆ) இப்பணியாளர்களின் பணிமுதுநிலை, அவர்கள் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையில் நியமனம் செய்யப்படவிருக்கும் நாளன்று, முதுநிலையில் கடைசியாக வைக்கப்பட வேண்டும்.

3. மேலே பத்தி 2 (அ)–வில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை தொடர்பாக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு உரிய செயற்குறிப்பினை அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. இவ்வாணை 11.5.2006 நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 20555/IM-II(1)/05–1 ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்